தேர்வு நாள்: 06.02.2022 **TEST - 2** நேரம்: 180 நிமிடங்கள்

**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement -10 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

**1)** பின்வருவனவற்றுள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பண்டமாற்றுகளில் சேராதது எது?

A) நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்ற செய்தி

B) ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்ற செய்தி

C) பொன்னைக் கொடுத்து மிளகாயைப் பெற்ற செய்தி

D) மேற்கண்ட எதுவுமில்லை

**2)** பொருத்துக:

(i) முடியரசன் – 1. மருமக்கள் வழி மான்மியம்

(ii) தாராபாரதி – 2. காவியப்பாவை

(iii) புவியரசு – 3. புதிய விடியல்கள்

(iv) கவிமணி – 4. தீர்க்கதரிசி

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 3 | 2 | 4 | 1 |

**3)** பொருந்தாதது எது?

A) திராவிட நாட்டின் வானம்பாடி - துரைராசு

B) கவிஞாயிறு - இராதாகிருஷ்ணன்

C) புவியரசு - பி.வி. அகிலாண்டம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**4)** "துன்புறும் உயிர்கள் கண்டால்; துரிசறு கனிவு காண்போம்;" என்ற வரிகளை இயற்றியவர் யார்?

A) கவிமணி தேசிக விநாயகனார்

B) தாயுமானவர்

C) தாராபாரதி

D) முத்தரையன்

**5)** பொருந்தாதது எது?

A) தொழுதல் - சினைப்பெயர்

B) கற்றல் - தொழிற்பெயர்

C) விடியல் - காலப்பெயர்

D) அன்பு - குணப்பெயர்

**6)** 'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் / பிறவும் தமபோல் செயின்' என வணிகரின் நேர்மையை விளக்கும் நூல்?

A) திருக்குறள்

B) பட்டினப்பாலை

C) மணிமேகலை

D) சிலப்பதிகாரம்

**7)** நகை என்ற சொல்லுடன் தொடர்பில்லாதது?

A) பரிகசித்தல்

B) நாணுதல்

C) ஆபரணம்

D) அணிகலன்

ETW ACADEMY

8) பொருத்துக

(i) தண்டருள் - 1. வயல்

(ii) பராபரம் - 2. குளிர்ந்த கருணை

(iii) கும்பி - 3. மேலான பொருள்

(iv) பூதலம் - 4. பூமி

(v) கழனி - 5. வயிறு

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 2 | 3 | 5 | 1 | 4 |
| C) | 2 | 3 | 4 | 1 | 5 |
| D) | 2 | 3 | 5 | 4 | 1 |

9) சமர் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) வலிமை B) போர் C) மறம் D) வயல்

10) கீழ்க்கண்டவற்றுள் எது முடியரசனின் நூல் அல்ல?

A) காவியப்பாவை B) பூங்கொடி

C) வீரகாவியம் D) விரல் நுனி வெளிச்சங்கள்

11) எவை சுட்டு எழுத்துகள்?

A) ஆ, ஏ, ஓ B) அ, இ, உ C) அ, ஆ, இ D) உ, ஊ, எ

12) இது எங்கள் கிழக்கு - என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) தாராபாரதி B) முடியரசன்

C) புவியரசு D) தேசிக விநாயகனார்

13) 'தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர் செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!' என்னும் பாடல் இடம்பெற்ற நூல் எது?

A) மனோன்மணிக் கண்ணி B) நிராமயக் கண்ணி

C) பராபரக்கண்ணி D) திருவாசகம்

14) இலக்கண அடிப்படையில் சொற்கள் எத்தனை வகைப்படும்

A) இரண்டு B) நான்கு C) மூன்று D) பத்து

15) பின்வரும் வாக்கியங்களில் எது(வை) சரி?

1. ஆங்கில மொழியில் "லைட் ஆ ஃப் ஆசியா" என்ற நூலை எழுதியவர் எர்னெஸ்ட் அர்னால்ட்

2. "லைட் ஆ ஃப் ஆசியா" என்ற நூலைத் தழுவி தமிழில் ஆசிய ஜோதி என்ற நூலை எழுதியவர் கவிமணி

3. ஆசியஜோதி என்பது புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் ஆகும்

A) 1 & 2

B) 2 & 3

C) 1 & 3

D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**16)** 'கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை மல்லெடுத்த திண்டோள் மறத்தால்..." எனத்துவங்கும் பாடலை இயற்றியவர் யார்?

A) புவியரசு B) கவிமணி C) தாராபாரதி D) முடியரசன்

**17)** புதுமைகள் செய்த தேசமிது பூமியின் கிழக்கு வாசலிது! என்ற கவிதை வரிகள் யாருடையது?

A) புவியரசு B) கவிமணி C) தாராபாரதி D) முடியரசன்

**18)** காந்தியடிகள் எங்கு வாழ்ந்த காலத்தில் தமிழ் கற்கத் தொடங்கியாத கூறினார்?

A தமிழ்நாடு B) இலண்டன் C) தென்னாப்பிரிக்கா D) பிரான்ஸ்

**19)** பராபரக்கண்ணியில் எந்த செய்திக் குறிப்பிடவில்லை?

A) அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்

B) எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்கக் கூடாது.

C) சில விதமான குற்றம் செய்தவருக்கும் கூட சொர்க்க வாழ்வு வந்து சேரும்.

D) அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

**20)** காந்தியடிகள் தலைமையில் சென்னையில் இலக்கிய மாநாடு நடைபெற்ற ஆண்டு?

A) 1936 B) 1937 C) 1938 D) 1939

**21)** புத்தர் - தவறான வாக்கியம் எது?

1. அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையை விட்டு வந்தவர்
2. நாடெங்கிலும் நடந்த உயிர்க்கொலையைத் தடுத்து நிறுத்தியவர்
3. கருணை நிறைந்த வள்ளல் எனப் போற்றப்படுபவர்
4. அசோகரின் யாகத்தில் பலியிட ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன. அவருக்கு உயிர்க்கொலை கூடாது என்றுஅறிவுரை வழங்கினார்

A) 1 மட்டும் B) 2 & 3 C) 4 மட்டும் D) ஏதுமில்லை

**22)** மொழியின் முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்துக்கள் எவை?

A) எ, யா B) ஏ
C) ஆ, ஓ D) மேற்கண்ட அனைத்தும்

**23)** பொருத்துக.

(i) பெயர்ச்சொல் - 1. பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை
(ii) வினைச்சொல் - 2. வா, போ, எழுது, விளையாடு
(iii) இடைச்சொல் - 3. தந்தையும் தாயும், மற்றொருவர், திருக்குறளை
(iv) உரிச்சொல் - 4. மாநகரம், சாலச்சிறந்தது

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

ETW ACADEMY

24) தம்முடைய பொருளைக் கவர்ந்தவரிடம் (தன் இரு கடுக்கன்கள்) அன்பு காட்டியவர்?

A) புத்தர் B) வள்ளலார்

C) மகாவீரர் D) வைகுண்ட சுவாமிகள்

25) வேலுநாச்சியார் அறிந்திராத மொழி?

A) பிரெஞ்சு B) உருது C) இந்தி D) ஆங்கிலம்

26) தாராபாரதியின் பின்வரும் கூற்றுகளில் எது சரி?

1. காளமேகத்தின் தேனிசைப்பாடல்கள் காவிரிக்கரையில் எதிரொலிப்பதாக தாராபாரதி கூறுகிறார்

2. கங்கை அலைகள் கம்பரின் கவிதை வரிகளுக்கு இசையமைப்பதாக தாராபாரதி குறிப்பிடுகிறார்

A) சரியானது ஏதுமில்லை B) இரண்டும் சரி

C) 1 மட்டும் D) 2 மட்டும்

27) தாயுமானவர் பாடல்கள் எவ்வாறு போற்றப்படுகின்றன?

A) ஆன்ற தமிழ்மறை B) தமிழ்வேதம்

C) தமிழ் மறை வேதம் D) மேற்கண்ட எதுவுமில்லை

28) "பூதலந் தன்னை நரகம்அது ஆக்கிடும் புத்தி" என்ற தொடரில் எது பூமியை நரகம் ஆக்கிவிடும் என்று கவிமணி கூறுகிறார்?

A) பாவங்கள் B) தீயச்செயல்கள் C) உயிர்க்கொலை D) நற்செயல்கள்

29) 'தமக்கென முயலா நோன்றாள் - பிறர்க்கென / முயலுநர் உண்மையானே' என்னும் பாடலடி இடம்பெற்ற இலக்கியம்?

A) குறுந்தொகை B) புற நானூறு C) கலித்தொகை D) நற்றிணை

30) தமிழன், யார் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சினான் என்று முடியரசன் கூறுகிறார்?

A) கயவர்கள் B) திருடர்கள் C) அறமில்லாதவர்கள் D) சான்றோர்கள்

31) "சேர்ப்பன்" - எத்திணைக்கு உரியவன்?

A) மருதம் B) நெய்தல் C) முல்லை D) பாலை

32) அண்ணல் காந்தியின் அகிம்சை எனும் சின்னக் கைத்தடி எதன் ஊன்றுகோலாக தாராபாரதியால் உருவகப்படுத்தப்படுவது?

A) கொல்லாமை B) துணிவு C) அறம் D) அஞ்சாமை

33) மதுரையில் உள்ளது?

A) காந்தியடிகளின் மணிமண்டபம்

B) காந்தியடிகளின் அருங்காட்சியகம்

C) காந்தியடிகளின் உடல் எச்சங்கள் சிலவற்றைக் கொண்ட நினைவிடம்

D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**34)** விழிப்புணர்ச்சி தேவைப்படும் இடமென கலீல் ஜிப்ரான் கூறுவது எப்போது?

A) உழைப்பின்போது B) ஓய்வின்போது C) சிந்தனையின்போது D) பேசும்போது

**35)** மணிபல்லவத் தீவையும், தீவிலுள்ள புத்தப் பீடிகையையும் காவல் செய்து வருபவர் யார்?

A) மணிமேகலை B) தீவதிலகை C) ஆதிரை D) மாதவி

**36)** மணிமேகலை கையிலிருந்த அமுத சுரபியில் முதன்முதலில் உணவிட்ட ஆதிரை எந்நகரைச் சேர்ந்தவள்?

A) மதுரை B) காஞ்சி C) புகார் D) வஞ்சி

**37)** அற நூல்களில் கூறப்படும் அறங்கள் எல்லாவற்றையும் விடச் சிறந்தது எது என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) நல்லவை கேட்டல் B) அல்லவை பேசாதிருத்தல்

C) பகிர்ந்து உண்ணுதல் D) பிறன்மனை நோக்காதிருத்தல்

**38)** 'நாட்டுப்புற இயல் ஆய்வு' என்னும் நூலைத் தொகுத்தவர் யார்?

A) நா.வானமாமலை B) ஆறு. இராமநாதன்

C) சு. சக்திவேல் D) புலவர் செ.இராசு

**39)** நாட்டுப்புற இயல் ஆய்வு என்ற நூலில் உள்ள "கடலோடு விளையாடு" என்றப் பாடலைக் கருத்தில் கொண்டு பொருத்துக:

(i) விடிவெள்ளி - 1. பஞ்சுமெத்தை

(ii) மணல் - 2. ஊஞ்சல்

(iii) புயல் - 3. போர்வை

(iv) பனிமூட்டம் - 4. விளக்கு

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 2 | 1 | 4 | 3 |

**40)** "அந்த, இந்த" ஆகிய சொற்கள்?

A) அண்மைச்சுட்டுக்கள் B) சுட்டுத் திரிபுகள்

C) சுட்டு வினாக்கள் D) வினாத் திரிபுகள்

**41)** 'தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து பிறநாட்டு உப்பின் கொள்ளைச் சுற்றி ..... உமணர் போகலும்' என்னும் பாடல் இடம்பெற்ற அகநூல்?

A) நற்றிணை

B) குறுந்தொகை

C) அகநானூறு

D) ஐங்குறுநூறு

ETW ACADEMY

**42)** பொருத்துக:

(i) மருதம் - 1. ஓதலாந்தையார்

(ii) நெதல் - 2. பேயனார்

(iii) குறிஞ்சி - 3. ஓரம்போகியார்

(iv) பாலை - 4. அம்மூவனார்

(v) முல்லை - 5. கபிலர்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| C) | 4 | 5 | 1 | 2 | 3 |
| D) | 5 | 1 | 2 | 3 | 4 |

**43)** காந்தியடிகளைக் கவர்ந்த 'தமிழ்க்கையேடு' என்ற நூலை இயற்றியவர்?

A) உ.வே.சா B) வையாபுரிப்பிள்ளை C) இராசமாணிக்கனார் D) ஜி.யு.போப்

**44)** மணிமேகலையை மணிபல்லவத்தீவில் கொண்டு வந்து சேர்த்த தெய்வம்?

A) நல்லத்தங்காள் தெய்வம் B) காயசண்டிகை தெய்வம்

C) மணிமேகலா தெய்வம் D) கொற்றவை தெய்வம்

**45)** பின் திரும்பி செல்லாதது, நேற்றுடன் ஒத்துப் போகாதது எது என்று கலீல் கிப்ரான் கூறுகிறார்?

A) மனிதன் B) பணம் C) வாழ்க்கை D) கவலை

**46)** தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே / துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி - இந்த பாடலில் இடம்பெற்றுள்ள அணி எது?

A) உயர்வு நவிற்சி B) பண்பு நவிற்சி C) பன்மை நவிற்சி D) இயல்பு நவிற்சி

**47)** தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே / துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி என்ற பாடலை இயற்றியவர் யார்?

A) பாரதியார் B) கவிமணி தேசிக விநாயகனார்

C) அழ.வள்ளியப்பா D) அ.முத்தரையனார்

**48)** காந்தியடிகள் தலைமையில் சென்னையில் நடந்த இலக்கிய மாநாட்டிற்கு வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தவர்?

A) உ.வே.சா B) வையாபுரிப்பிள்ளை C) இராசமாணிக்கனார் D) ஜி.யு. போப்

**49)** வணிகர்கள் வண்டிகளில் பொருட்களை ஏற்றி வெளியூருக்குச் செல்லும்போது குழுவாக செல்வார்கள். இக்குழுவை .................... என்று அழைப்பர்.

A) நாடோடிக்குழு B) வணிகக்குழு C) வணிகக்கூட்டம் D) வணிகச்சாத்து

**50)** புகார் நகரத்திற்கு சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களில் சேராதது எது?

A) மயில்தோகை B) கற்பூரம் C) பட்டு D) கண்ணாடி

ETW ACADEMY

51) 'பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்காதீர்' என்பது யாருடைய அறிவுரை?

A) ஔவையார் B) திருவள்ளுவர் C) கவிமணி D) தாயுமானவர்

52) மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ............

A) இலங்கைத் தீவு B) இலட்சத் தீவு C) மணிபல்லவத் தீவு D) மாலத் தீவு

53) தாவரங்களின் உரையாடல் என்னும் சிறுகதைத் தொகுப்பை இயற்றியவர்?

A) புவியரசு B) அ.முத்தரையனார் C) எஸ். இராமகிருஷ்ணன் D) ஜெயகாந்தன்

54) பின்வரும் வாக்கியங்களில் சரியானவை எவை?

1. பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும்.

2. பொருட்பெயர் என்பது உயிருள்ள பொருள்களை மட்டுமே குறிக்கும்.

3. பொருட்பெயருக்கு எடுத்துக்காட்டுகள்: மரம், செடி, மயில், பறவை, புத்தகம், நாற்காலி

A) 1 & 2 B) 2 & 3

C) 1 & 3 D) மேற்கண்ட அனைத்தும்

55) இடுகுறிப்பெயரை தேர்க:

A) செடி B) பறவை C) முக்காலி D) மரங்கொத்தி

56) தம்மை பாதுகாத்துக்கொள்ளும் வழிகளுள் சிறந்தது எது என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) சிறியோரை வெகுளாமை B) ஆற்றல் உடையவரை இகழாமை

C) பெரியோரை பகையாமை D) கல்லாமை இல்லாமை

57) உழைக்கும்போது நாம் எவ்வாறு ஆவதாக கலீல் ஜிப்ரான் கூறுகிறார்?

A) புல்லாங்குழல் B) வளையும் நாணல் C) மூங்கில் குருத்து D) இறைவன்

58) பாரதியார் காந்தியடிகளை சந்தித்த இடம்?

A) இராஜாஜியின் வீடு B) சூரத் மாநாடு

C) கானாடுகாத்தான் D) சென்னை காங்கிரஸ் அலுவலகம்

59) அன்பர்களுக்குத் தொண்டுசெய்யும்போது எது வந்து சேரும் என்று தாயுமானவர் தனது பராபரக்கண்ணியில் பாடுகிறார்?

A) அருள்நிறைந்த மேலோகம் B) இன்பநிலை

C) பசிப்பினியற்ற வாழ்வு D) கண்ணிய வாழ்வு

60) அறக்கோட்டமாக எது மாறவேண்டும் என மணிமேகலை மன்னனிடம் வேண்டுகோள் விடுத்தாள்?

A) பரத்தையர் மாளிகை B) போர்க்களம்

C) கோட்டைக் கொத்தளம் D) சிறைக்கோட்டம்

61) எதுவே சிறந்த அறம் என்கிறார் திருவள்ளுவர்?

A) உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பது B) ஏழைகளுக்கு உணவளிப்பது

C) பெரியோரை பிழையாமல் இருப்பது D) மேற்கண்ட அனைத்தும்



ETW ACADEMY

62) வேலுநாச்சியாரைக் காட்டிக்கொடுக்கச் சொல்லி ஆங்கிலேயர்களால் துன்புறுத்தப்பட்டப் பெண் யார்?

A) உடையாள் B) முத்துப்பேச்சி C) சகுந்தலை D) குயிலி

63) பின்வரும் எது காரணச் சிறப்புப்பெயர்?

A) பறவை B) கருவேலம் C) வளையல் D) கனி

64) மக்களின் பசிப்பிணியைப் போக்க வள்ளலார் சத்திய தருமச்சாலையை எங்கு நிறுவினார்?

A) கடலூர் B) சிதம்பரம் C) மருதூர் D) வடலூர்

65) எந்நோய் பாதித்தவர்களுக்கு தொண்டு செய்ய அன்னைத் தெரசா முடிவெடுத்தார்?

A) தொழுநோய் B) காசநோய்

C) ஏய்ட்ஸ் நோய் D) மேற்கண்ட எதுவுமில்லை

66) “நடுவு நின்ற நன்னெஞ்சினோர்” என வணிகரை பாராட்டும் நூல் எது?

A) கலித்தொகை B) பட்டினப்பாலை C) சிலப்பதிகாரம் D) மணிமேகலை

67) இயல்பு நவிற்சி அணியின் வேறுபெயர்?

A) உயர்வு நவிற்சி அணி B) தன்மை நவிற்சி அணி

C) பன்மை நவிற்சி அணி D) பண்பு நவிற்சி அணி

68) நாட்டுப்புற இலக்கியத்தின் வேறுபெயர்?

A) இக்கால இலக்கியம் B) வாய்மொழி இலக்கியம்

C) பாமர இலக்கியம் D) பின்நவீனத்துவ இலக்கியம்

69) உமணர் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) நெல் வணிகர் B) உப்பு வணிகர்

C) பலசரக்கு வணிகர் D) வெளிநாட்டு வணிகர்

70) 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' என்னும் வரிகள் இடம்பெற்ற இலக்கியம்?

A) நற்றிணை B) குறுந்தொகை C) அகநானூறு D) ஐங்குறுநூறு

71) பின்வரும் வாக்கியங்களை ஆராய்ந்து விடையளி

1. பாரதியாரை தமிழ்நாட்டின் சொத்து என்றவர் இராஜாஜி

2. பாரதியாரை இந்திய நாட்டின் சொத்து என்றவர் காந்தி

A) 1 மட்டும் சரி B) 2 சரி; 1 தவறு C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

72) கோ - பொருந்தாத பொருளைக் கண்டறிக.

A) பசு B) முகம் C) அரசன் D) தலைவன்

73) நேர்மையான வாழ்வை வாழ்பவர் யாரென்று புத்தர் கூறினார்?

A) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர் B) அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதுபவர்

C) பிறர்குற்றம் போல் தன் குற்றம் பார்ப்பவர் D) பிறரின் பசியை தனது பசியாகக் கருதுபவர்

ETW ACADEMY

**74)** இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

A) இன்உயிர் B) இனியஉயிர் C) இன்னுயிர் D) இனிமைஉயிர்

**75)** "சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்!" என்று பாடியவர் யார்?

A) தாராபாரதி B) பாரதிதாசன் C) பாரதியார் D) காளிதாசன்

**76)** யாருக்கு தொண்டு செய்யவேண்டும் என்று தாயுமானவர் பாடுகிறார்?

A) அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்கு

B) அனைத்து உயிர்களுக்கும் உதவிசெய்யும் கருணை மிகுந்த சான்றோர்க்கு

C) அனைத்து உயிர்களுக்கும் உணவிடும் கருணை மிகுந்த சான்றோர்க்கு

D) மேற்கண்ட அனைத்தும்

**77)** பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது ........... ஆகும்

A) இடைச்சொல் B) பெயர்ச்சொல் C) உரிச்சொல் D) வினைச்சொல்

**78)** எங்கு நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார்.

A) விருதுநகர் B) விருப்பாச்சி

C) திண்டுக்கல் D) காளையார்கோவில்

**79)** அருகில் மற்றும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு ........... என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

A) அ B) ஆ

C) உ D) மேற்கண்ட அனைத்தும்

**80)** நீள் நிலம் முழுக்க ஆள்வதற்கு எது தேவையென புத்தர் கூறினார்?

A) இரக்கம் B) பொருள் C) போர்ப்படை D) ஆளுமை

**81)** தாயுமானவர் யாரிடம் பெருங்கணக்கராகப் பணியாற்றினார்?

A) விஜய ரகுநாத பூபதி B) சீதக்காதி

C) விஜய ரகுநாத சொக்கலிங்கர் D) திருவெண்ணெய்நல்லூர் சடையப்பவள்ளல்

**82)** தாராபாரதியின் பாடலைக் கருத்தில்கொண்டு தவறான இணை எது என்று தேர்க:

A) மெய்யுணர்வு - தமிழ்த்தாய்க்கு மேலாடை

B) திருக்குறள் - தேசம் உடுத்திய நூலாடை

C) இந்தியா - பூமியின் கிழக்கு வாசல்

D) தவறானது ஏதுமில்லை

**83)** மனிதன் உருவாகியதாக முடியரசன் கூறும் நால்வகை நிலங்களில் சேராதது எது?

A) குறிஞ்சி B) முல்லை

C) மருதம் D) பாலை

ETW ACADEMY

**84)** தாராபாரதி இயற்றாத வரிகள் எது?

A) மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக் கிழக்குக் கரையின் நலம்கேட்கும்!

B) கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் / காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்

C) கல்லைக் கூட காவிய மாக்கிக் கட்டி நிறுத்திய கலைக்கூடம்!

D) புல்வெளி யெல்லாம் பூக்காடாகிப் புன்னகை செய்த பொற்காலம்!

**85)** பொருந்தா இணை எது?

A) காந்தள் - குறிஞ்சி B) தோன்றி - முல்லை C) தாமரை - மருதம் D) பாதிரி - நெய்தல்

**86)** காந்தியடிகளின் தமிழக வருகை பற்றிய வாக்கியங்களில் எது தவறு?

A) காந்தியடிகள் முதன்முறையாகச் சென்னைக்கு 1919 பிப்ரவரியில் வந்தார்

B) 1919 பிப்ரவரியில் அவர் தமிழகத்துக்கு வந்தபோதுதான் அவரது உடையில் மாற்றம் ஏற்படுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

C) காந்தியடிகளின் தோற்றத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமைக்குரிய இடம் மதுரை

D) மேற்கண்ட எதுவுமில்லை

**87)** கலீல் ஜிப்ரான் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A) துருக்கி B) பாலஸ்தீனம் C) லெபனான் D) பாகிஸ்தான்

**88)** அமுத சுரபி என்னும் அரிய பாத்திரம் மணிமேகலைக்கு முன்பு யாருடைய கையிலிருந்தது?

A) காஞ்சணன் B) மணிமேகலா தெய்வம் C) உதயகுமாரன் D) ஆபுத்திரன்

**89)** வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு?

A) 1730 B) 1796 C) 1780 D) 1788

**90)** எஸ்.இராமகிருஷ்ணனின் நூல் அல்லாதது எது?

A) உபபாண்டவம் B) கதாவிலாசம்

C) நட்சத்திரவாசிகள் D) கால் முளைத்த கதைகள்

**91)** பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?

A) எட்டு B) பத்து C) ஆறு D) ஐந்து

**92)** நாட்டுப்புற பாடல்களுள் அடங்குவது எது?

A) ஏற்றப்பாட்டு & ஓடப்பாட்டு B) விளையாட்டுப் பாடல்கள்

C) தாலாட்டுப் பாடல் D) மேற்கண்ட அனைத்தும்

**93)** 'பாலொடு வந்து கூழொடு பெயரும்' என விளக்கும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை C) அகநானூறு D) ஐங்குறுநூறு

**94)** வேலு நாச்சியாருக்கு ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களைத் தந்து உதவியவர்?

A) திப்பு சுல்தான் B) ஐதர் அலி

C) கோபால நாயக்கர் D) இரண்டாம் அக்பர் ஷா

ETW ACADEMY

95) தவறான தொடரைக் கண்டறிக.

A) குற்றால அருவியில் நீராட அனைவருக்கும் உரிமை அளிக்கப்பட்டு இருந்தது.

B) அருவிக்குச் செல்லும் வழியில் ஒரு கோவில் இருந்தது. அதன் வழியாகச் செல்ல எல்லோருக்கும் அனுமதி இல்லை

C) அனைவரும் அருவியில் நீராட முடியாத நிலை இருந்ததை அறிந்த காந்தியடிகள் குற்றால அருவியில் அமர்ந்தபடி சத்யாகிரகம் செய்தார்

D) மனிதர்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது என்பதில் காந்தியடிகள் உறுதியாக இருந்தார்.

96) குளிர்நீரில் குளித்தால் கூதல் அடிக்குமென்று / வெந்நீரில் குளித்தால் மேலே கருக்குமென்று / ஆகாச கங்கை அனல் உறைக்குமென்று / பாதாள கங்கையைப் பாடி அழைத்தார் உன் தாத்தா - இந்த பாடலில் இடம்பெற்றுள்ள அணி எது?

A) உயர்வு நவிற்சி B) பண்பு நவிற்சி C) தன்மை நவிற்சி D) இயல்பு நவிற்சி

97) துறைமுக நகரங்கள் எவ்வாறு அழைக்கப்படவில்லை?

A) பட்டிணம் B) பாக்கம்

C) வாக்கம் D) மேற்கண்ட எதுவுமில்லை

98) "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று காந்தியடிகள் குறிப்பிட்ட நபர்?

A) இராசமாணிக்கனார் B) வீரமாமுனிவர் C) உ.வே.சா D) ஜி.யு.போப்

99) வேலுநாச்சியார் ஐதர் அலியிடம் எந்த மொழியில் உரையாடினார்?

A) தமிழ் B) உருது C) அரபு D) ஆங்கிலம்

100) மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு காந்தியடிகள் செல்ல மறுத்ததன் காரணம்?

A) எல்லோருக்கும் அனுமதி வழங்கப்பட்டது

B) காந்தியடிகளுக்கு உடல்நிலை சரியில்லை

C) எல்லா மக்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை

D) செல்வந்தர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது

101) காரன் வாலிஸ்

1. நீதிமன்றக் கட்டணங்களை ஒழித்தார்.

2. குற்றவியல் நீதிமன்றங்களில் சீர்திருத்தம் செய்தார்.

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி C) 1 & 2 சரி D) 1 & 2 தவறு

102) காயமடைந்த எந்த ஒரு குடிமகனுக்கும் வழக்கமான நடைமுறைகளைக் காரணங்காட்டி காத்திருக்க வைக்காமல் மருத்துவ உதவியினை செய்யவேண்டும் என்ற தீர்ப்பினை எவ்வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கியது?

A) சுப்ரமண்ய சின்ஹா Vs இந்திய அரசு B) ஆர்தர் சன் சிங்கர் Vs இந்திய அரசு

C) பரமானந் கட்டாரா Vs இந்திய அரசு D) குமார சின்ஹா Vs இந்திய அரசு

ETW ACADEMY

**103)** குகைகளில் காணப்படும் தமிழ் பிராமி கல்வெட்டுகள் மூலம் சங்ககாலத்தில் எந்த சமயம் வழக்கத்தில் இருந்திருக்கலாம் என அறியமுடிகிறது?

A) பௌத்தம் B) சமணம் C) காணபத்தியம் D) கௌமாரம்

**104)** பின்வரும் வாக்கியங்களில் எது(வை) சரி?

1. "நகரங்களில் சிறந்தது காஞ்சி" என்று கூறியவர் காளிதாசர்

2. "கல்வியில் கரையிலாத காஞ்சி" என காஞ்சி நகரைப் புகழ்ந்துள்ளவர் திருஞானசம்பந்தர்

3. புத்தகயா, சாஞ்சி போன்ற ஏழு இந்தியப் புனிதத் தலங்களுள் காஞ்சியும் ஒன்று என குறிப்பிடுபவர் யுவான் சுவாங்

A) 1 & 2 B) 1 & 3 C) 2 & 3 D) 1, 2 & 3

**105)** ஆண்டாளின் திருப்பாவை, நம்மாழ்வாரின் திருப்பல்லாண்டு ஆகியவை யார் காலத்தைய இலக்கியங்கள் ஆகும்?

A) சோழர் B) பாண்டியர் C) பல்லவர் D) சேரர்

**106)** கூற்று: பல்லவர்கள், துவக்ககாலத்தில் பிராகிருத மொழியிலும், வடமொழியிலுமே கல்வெட்டுகளை வெளியிட்டனர்.

காரணம்: காகதியர்கள் உடனான தொடர்பே இதற்குக் காரணம்.

A) கூற்றும் காரணமும் சரி; காரணம் சரியான விளக்கமே

B) கூற்றும் காரணமும் சரி; காரணம் சரியான விளக்கமல்ல

C) கூற்று சரி; காரணம் தவறு

D) கூற்று தவறு; காரணம் சரி

**107)** வாதாபி சாளுக்கிய மரபைத் தோற்றுவித்தவர் யார்?

A) முதலாம் புலிகேசி B) அமோகவர்ஷர்

C) தந்திதுர்கர் D) கிருஷ்ணதேவராயர்

**108)** பிற்காலச் சோழமரபை விஜயாலயன் தொடங்கிவைத்த ஆண்டு?

A) பொ.ஆ. 805 B) பொ.ஆ. 795 C) பொ.ஆ. 815 D) பொ.ஆ. 830

**109)** பின்வரும் வாக்கியங்களில் எது(வை) சரி?

1. ஆதித்ய சோழன், அபராஜித பல்லவனை முறியடித்து பல்லவர் ஆட்சிக்கு முடிவு கட்டினார்

2. பாண்டியர்களின் தலைநகரான மதுரையை வென்றதால் மதுரை கொண்டான் என புகழப்பட்டவர் ஆதித்த சோழன் ஆவார்

3. சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு பொற்கூரை வேய்ந்தவர் முதலாம் பராந்தகன் ஆவார்

A) 1 & 2
B) 2 & 3
C) 1 & 3
D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**110)** சமகாலத்தவர்களில் தவறான இணை எது?

A) அரிகேசரி மாறவர்மன் - முதலாம் மகேந்திரவர்மன்
B) இரண்டாம் நந்திவர்மன் - திருமங்கை ஆழ்வார்
C) முதலாம் இராஜேந்திரன் – மகிபாலன்
D) முதலாம் ராஜராஜன் - இரண்டாம் மகிந்தன்

**111)** அசோகரது கல்வெட்டுகளில் கானப்படும் ______ தான் பல்லவர்கள் என்று கருதப்படுகிறது.

A) கோபன்கள் B) புலிந்தர்கள் C) சாதவாகனர்கள் D) சிம்மர்கள்

**112)** பொன், கழஞ்சு, காசு ஆகியவை யார் காலத்தைய தங்க நாணயங்கள் ஆகும்?

A) சோழர்கள் B) சாளுக்கியர்கள் C) பாண்டியர்கள் D) பல்லவர்கள்

**113)** சாணக்கியர், தனது அர்த்தசாஸ்திரத்தை எப்பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து தொகுத்ததாக கூறப்படுகிறது?

A) நாளந்தா B) தட்சசீலம் C) விக்ரமசீலா D) ஜகத்தாலா

**114)** தட்சசீலம், நாளந்தா, வல்லபி, விக்கிரமசீலா, ஓடண்டாபுரி & ஜகத்தாலா ஆகிய இடங்களில் தோன்றிய பல்கலைக்கழகங்கள் _____இன் தொடர்புடன் மேம்படுத்தப்பட்டன.

A) கோயில்கள்
B) சமணப்பள்ளிகள்
C) பௌத்த விகாரங்கள்
D) மேற்கண்ட அனைத்தும்

**115)** டெல்லியில் ஒரு மதரசாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் யார்?

A) இல்துமிஷ்
B) அலாவுதீன் கில்ஜி
C) பெரோஷ் ஷா துக்ளக்
D) அக்பர்

**116)** அமைச்சர்கள், தனித்தனியாகவும் கூட்டாகவும் ____ ஆல் நீக்க கூடியவர்கள் மற்றும் பொறுப்புடையவர்கள்.

A) சபாநாயகர் B) மக்களவை C) குடியரசுத்தலைவர் D) மாநிலங்களவை

**117)** சபாநாயகரின் பணி அல்லது அதிகாரத்தில் சேராதது?

A) நாடாளுமன்றத்தின் கூட்டு கூட்டுத்தொடருக்கு தலைமை தாங்குதல்
B) ஒரு திருத்தசட்ட முன்வரைவை அனுமதிப்பதா இல்லையா என்பதை தீர்மானித்தல்
C) ஒவ்வொரு வருடமும், நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்தில் சிறப்புரை வழங்குதல்
D) ஒரு மசோதாவை நிதி மசோதா என்று சான்றளித்தல்

**118)** மாநிலங்களவையின் ஆயுட்காலம் என்ன?

A) மக்களவை கலைக்கப்படும் வரை
B) 6 ஆண்டுகள்
C) 5 ஆண்டுகள்
D) கலைக்கப்படுவது இல்லை

**119)** ஒரு உறுப்பினர், தனி நபர் மசோதாவை அறிமுகப்படுத்த வேண்டுமெனில், அதை மக்களவை சபாநாயகருக்கோ அல்லது மாநிலங்களவை தலைவருக்கோ எப்போதே தெரிவிக்கவேண்டும்?

A) 21 நாட்கள் முன்பு
B) ஒரு மாதம் முன்பு
C) 14 நாட்கள் முன்பு
D) 7 நாட்கள் முன்பு

ETW ACADEMY

**120)** குடியரசுத்தலைவரின் பரிந்துரையின் பேரில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும் மசோதா மற்றும் மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்தமுடியும் மசோதா எது?

A) தனிநபர் சட்ட முன்வரைவு

B) நிதி சட்ட முன்வரைவு

C) திருத்தச் சட்ட முன்வரைவு

D) அடிப்படைஉரிமைகளில் மாற்றம் கொண்டுவருவதற்கான மசோதா

**121)** இந்திய உச்ச நீதி மன்றத்தை நிறுவ வழி செய்த அரசமைப்பு உறுப்பு எது?

A) 64 B) 124 C) 164 D) 152

**122)** ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதி தனது கைப்பட எழுதப்பட்ட பதவிவிலகல் கடிதத்தை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டும்?

A) இந்தியத் தலைமை நீதிபதி

B) குடியரசுத்தலைவர்

C) கொலிஜியம்

D) குடியரசுத் துணைத்தலைவர்

**123)** இந்தியாவின் முதல் பட்டியலின உச்சநீதிமன்ற நீதிபதி யார்?

A) எல். இளையபெருமாள்

B) கே.ஜி. பாலகிருஷ்ணன்

C) எஸ்.ஆர். பாஸ்கரன்

D) ஏ.எல். குமரகுருபன்

**124)** தவறான இணை எது?

1. சோழநாடு – சோறுடைத்து

2. பாண்டியநாடு – முத்துடைத்து

3. சேரநாடு – வேழமுடைத்து

4. தொண்டைநாடு – சான்றோருடைத்து

A) 4 மட்டும்

B) 2ம் 3ம் மட்டும்

C) 1ம் 3ம் மட்டும்

D) தவறானது ஏதுமில்லை

**125)** பஃறுளி ஆறு ஓடி, பன்மலை அடுக்கம் நீண்டு மழைவளம் பெருகி, பெருங்காடுகள் வளர்ந்து மக்களின் நாகரிகம் சிறந்து நல்லதோர் ஆட்சி நடந்தது. அந்த அரசு எது என கருதப்படுகிறது?

A) சேரர் அரசு

B) சோழர் அரசு

C) பாண்டியர் அரசு

D) பல்லவர் அரசு

**126)** தமிழ்நாட்டில் எத்தனைக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கற்பாறைகளிலும் குகை வாழிடங்களிலும் காணப்படுகின்றன?

A) 30 B) 40 C) 50 D) 60

**127)** சமய அடியார்களும் அவர்களால் சமயம் மாற்றப்பட்டவர்களும் இணைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளனர். அவற்றுள் பொருந்தா இணை எது(வை)?

1. முதலாம் மகேந்திரவர்மன் - அப்பர்

2. அரிகேசரி மாறவர்மன் - திருஞானசம்பந்தர்

A) 1 மட்டும்

B) 2 மட்டும்

C) 1 & 2

D) பொருந்தாதது ஏதுமில்லை

ETW ACADEMY

**128)** இரண்டாம் புலிகேசி மற்றும் ஹர்ஷர் ஆகியோருக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இருவருக்கும் இடையேயான எல்லையாக வரையறை செய்யப்பட்டது எது?

A) கிருஷ்ணா நதி B) துங்கபத்திரை நதி C) நர்மதை நதி D) யமுனா நதி

**129)** விழுப்புரம் அருகேயுள்ள எண்ணாயிரம் எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவியவர்?

A) முதலாம் இராஜராஜன் B) முதலாம் பராந்தகன்

C) இரண்டாம் இராஜராஜன் D) முதலாம் இராஜேந்திரன்

**130)** பாண்டியர் கால சிற்பங்களை நாம் எங்கு காணமுடியாது?

A) திருப்பரங்குன்றம் B) நார்த்தாமலை C) கழுகுமலை D) விராலிமலை

**131)** முதலாம் மகேந்திரவர்மனை, விசித்திரசித்தன் என்று புகழும் கல்வெட்டு எது?

A) காஞ்சி கைலாசநாதர் கோயில் கல்வெட்டு B) மாமண்டூர் கல்வெட்டு

C) மகேந்திரவாடி கல்வெட்டு D) மண்டகப்பட்டு கல்வெட்டு

**132)** சாளுக்கியர்கள் பற்றிக் குறிப்பிடும் தமிழக கல்வெட்டு எது?

A) மாமண்டூர் கல்வெட்டு B) மகேந்திரவாடி கல்வெட்டு

C) கைலாசநாதர் கோயில் கல்வெட்டு D) வரதராசப்பெருமாள் கோயில் கல்வெட்டு

**133)** இராஜேந்திர சோழன்

1. ஈழமண்டலம் எனப்படும் இலங்கை முழுவதையும் கைப்பற்றியவர்

2. இவர் தன் தந்தையைப் போல பேரரசை விரிவுபடுத்தி, தான் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைக்க வில்லை

2. இவருடைய காலத்தில் சோழ-சாளுக்கிய எல்லையாக துங்கபத்திரை நதி அங்கீகரிக்கப்பட்டது

A) 1 & 3 மட்டும் சரி B) 2 & 3 மட்டும் சரி

C) 1, 2 மட்டும் சரி D) மேற்கண்ட அனைத்தும் சரி

**134)** சோழ அரசர்களால் சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

A) தேவதானம் B) சதுர்வேதிமங்கலம்

C) பிரம்மதேயம் D) பள்ளிச்சந்தம்

**135)** மத்தவிலாசப்பிரகாசனம் எம்மதத்தை இழிவுசெய்வதாய் உள்ளது?

A) சமணம் B) சைவம் C) வைணவம் D) பௌத்தம்

**136)** விஜயாலயனின் வழிவந்தோரில் கடைசி சோழ அரசன் யார்?

A) அதிராஜேந்திரன் B) மூன்றாம் ராஜேந்திரன்

C) மூன்றாம் ராஜராஜன் D) மூன்றாம் குலோத்துங்கன்

**137)** ராமானுஜர், கல்விக்காக தனது குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை வழங்கிய "அஹோபில மடம்" எங்குள்ளது?

A) காஞ்சிபுரம் B) ஸ்ரீவில்லிப்புத்தூர் C) கும்பகோணம் D) ஸ்ரீரங்கம்



ETW ACADEMY

**138)** 1912ஆம் ஆண்டு, தரங்கம்பாடியில் 20 இலவச பள்ளிகளை நிறுவியவர்?

A) ஜான் கிர்னாண்டர் B) இவாஞ்சிலின் C) சி.எஸ்.ஜான் D) மில்டன்

**139)** கிழக்கிந்திய கம்பெனியை, இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை மிகக் குறைந்த அளவில் ஏற்கும்படி முதன்முதலில் கட்டாயப்படுத்தியது எது?

A) ஹண்டர் குழு அறிக்கை B) 1813 பட்டய சட்டம்

C) சார்லஸ் உட்ஸ் அறிக்கை D) 1935 இந்திய அரசுச் சட்டம்

**140)** மாநில நிர்வாகத்தின் அரசமைப்புத் தலைவராக இருப்பவர் யார்?

A) குடியரசுத்தலைவர் B) ஆளுநர்

C) முதலமைச்சர் D) தலைமைச் செயலாளர்

**141)** குடியரசுத்தலைவருக்கு எதிரான கண்டனத்தீர்மானத்தை ஏதேனும் ஒரு அவையில் எத்தனை நாட்களுக்கு முன் அறிவிக்க வேண்டும்?

A) 10 B) 12 C) 14 D) 16

**142)** சட்டமன்றக் குழுக்களின் தலைவர்களை நியமித்து அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுபவர் யார்?

A) தலைமைச் செயலாளர் B) முதலமைச்சர் C) ஆளுநர் D) சபாநாயகர்

**143)** துணைக் குடியரசுத்தலைவரின் பதவி நீக்க தீர்மானத்தை பின்வரும் எங்கு மட்டுமே துவக்க முடியும்?

A) மக்களவை B) மாநிலங்களவை C) ராஷ்டிரபதி பவன் D) உச்சநீதிமன்றம்

**144)** குடியரசுத்தலைவரின் தகுதி மற்றும் தேர்தல் ஆகியவற்றைப் பற்றி தெரிவிக்கும் அரசமைப்பின் உறுப்பு எது?

A) 55 B) 56 C) 57 D) 58

**145)** இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் தேர்தலில் வாக்குசெலுத்துபவர்களில் சேராதவர்கள் யார்?

A) மக்களவை உறுப்பினர்கள் B) மாநிலங்களவை உறுப்பினர்கள்

C) மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் D) சேராதவர் எவருமில்லை

**146)** ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் எது மட்டுமே தனக்கான உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளது?

A) புதுச்சேரி B) டெல்லி C) லடாக் D) சண்டிகர்

**147)** துக்ளக் ஆட்சிகாலத்தில் உரிமையியல் நடைமுறைச் சட்டங்கள் தொகுக்கப்பட்டு அது எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) ஃபட்வா-இ-பெரோஸ்-ஷாகி B) ஃபைகா-இ-ஃபெரோஸ்-ஷாகி

C) ஃபட்வா-இ-ஆலம்கீர் D) ஏதுமில்லை

**148)** "கூடல்ஊர் ஆகோள் பெடு தியன் அந்தவன் கல்" என்ற செய்திகள் காணப்படும் நடுகல் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

A) புலிமான்கோம்பை B) தாதப்பட்டி C) பொற்பனைக்கோட்டை D) ஏதுமில்லை

ETW ACADEMY

**149)** ஓமன் நாட்டில் தமிழ் பிராமி எழுத்துக்களில் மக்களின் பெயர் பொறித்த சுடுமண் கலங்களின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

A) கோர் ரோரி B) பெரேனிகே C) குசேர் அல் காதிம் D) எரானிடா

**150)** அரிக்கமேடு அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொண்டவர்?

A) சர் இராபர்ட் எரிக் மாட்டிமர் வீலர் B) ஜே.எம். கசால்
C) சார்லஸ் மேசன் D) அலெக்சாண்டர் கன்னிங்காம்

**151)** சோழர்களைப் பற்றிய செய்திகளை நாம் எங்கு காணமுடியாது?

A) அசோகர் கல்வெட்டு B) மகாபாரதம்
C) வால்மீகி இராமாயணம் D) மெகஸ்தனிஸ், தாலமி குறிப்புகள்

**152)** பாண்டிய அரசு “செல்வச் செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்” என குறிப்பிடுபவர் யார்?

A) மெகஸ்தனிஸ் B) பிளினி C) மார்கோபோலோ D) யுவான் சுவாங்

**153)** சித்தன்னவாசல் குடைவரையில் உள்ள ஓவியங்கள் யாருடைய காலத்தவை?

A) முதலாம் வரகுணன் B) இரண்டாம் வரகுணன்
C) மாறவர்மன் சுந்தரபாண்டியன் D) ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்

**154)** தேவாரம் - யார் காலத்தில் தொகுக்கப்பட்ட சைவத்திருமுறை ஆகும்?

A) முதலாம் குலோத்துங்கன் B) இராஜேந்திரன்
C) இராஜராஜன் D) மூன்றாம் குலோத்துங்கன்

**155)** 1937ஆம் ஆண்டு பிரபலமான அடிப்படைக் கல்வித் திட்டமான வார்தா கல்வித் திட்டத்தை உருவாக்கியவர் யார்?

A) தாமஸ் மன்றோ B) சார்ஜண்ட்
C) காந்தியடிகள் D) டாக்டர் ராதாகிருஷ்ணன்

**156)** இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் “மகாசாசனம்” என்று அழைக்கப்படுவது எது?

A) சார்ஜண்ட் அறிக்கை B) 1882 ஹண்டர் குழு அறிக்கை
C) தாமஸ் மன்றோ அறிக்கை D) சார்லஸ் உட்ஸ் கல்வி அறிக்கை

**157)** டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக்குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி, உயர்கல்வியின் தரத்தை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட அமைப்பு எது?

A) பல்கலைக்கழக மானியக் குழு B) மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம்
C) இடைநிலைக் கல்விக்குழு D) தேசிய உயர்கல்வி இயக்குநரகம்

**158)** எந்தக் கல்விக்குழுவானது, நாடு முழுவதும் ஒரே மாதிரியான 10 + 2 + 3 கல்வி அமைப்பை பரிந்துரை செய்தது?

A) டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு B) டாக்டர் D.S. கோத்தாரி கல்விக்குழு
C) இடைநிலைக் கல்விக்குழு D) பல்கலைக்கழக மானியக் குழு

ETW ACADEMY

**159)** பிரதமரை குடியரசுத்தலைவர் நியமனம் செய்வதாக கூறும் அரசமைப்பின் உறுப்பு எது?

A) 73 B) 74 C) 75 D) 72

**160)** அரசமைப்பின் எந்த உறுப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருப்பார் என்கிறது?

A) 153 B) 157 C) 163 D) 167

**161)** பின்வரும் எது ஆளுநரின் அதிகாரம் அல்ல?

A) மாநில வழக்குரைஞரை நியமிப்பது

B) மாநிலப் மாநிலப் பொதுப் பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பது

C) மாநிலத்தின் அரசு வழக்கறிஞரை பதவிநீக்கம் செய்வது

D) மாநிலப் மாநிலப் பொதுப் பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை பதவிநீக்கம் செய்வது

**162)** சட்டமன்றம் அமர்வில் இல்லாத காலங்களில் ஆளுநர் பிறப்பிக்கும் சட்டங்கள், சட்டமன்றம் மீண்டும் கூடியதிலிருந்து எவ்வளவு காலத்திற்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்?

A) ஆறு மாதங்கள் B) ஆறு வாரங்கள்

C) மூன்று வாரங்கள் D) மூன்று மாதங்கள்

**163)** நாட்டின் மிகப்பழமையான உயர்நீதிமன்றம் எது?

A) சென்னை உயர்நீதிமன்றம் B) மும்பை உயர்நீதிமன்றம்

C) கல்கத்தா உயர்நீதிமன்றம் D) அலகாபாத் உயர்நீதிமன்றம்

**164)** நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று கூறும் அரசமைப்பு உறுப்பு எது?

A) 11(2) B) 12(3) C) 13(2) D) 14(3)

**165)** 24.04.1973-க்குப் பின்னர் அரசமைப்பின் எந்த பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பாக மறுசீராய்வு கோர முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது?

A) எட்டாவது B) ஆறாவது C) பன்னிரெண்டாவது D) ஒன்பதாவது

**166)** ரோமானிய நாணயங்கள் தென்னிந்தியாவில் எம்மண்டலத்தில் செறிந்து காணப்படுகின்றன?

A) திருச்சி B) காஞ்சிபுரம் C) கோயம்புத்தூர் D) மதுரை

**167)** தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இருந்த வணிகர்கள் குறித்தும் குதிரை வணிகர்கள் குறித்தும் குறிப்பிடும் இலங்கை நூல் எது?

A) மகாவம்சம் B) புத்தவம்சம் C) மகாயானவம்சம் D) விக்கிரமவம்சம்

**168)** பொன்னை உருக்கும் உலைகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ள இடம் எது?

A) பொருந்தல் B) கொடுமணல் C) கேரளத்தின் பட்டணம் D) ஆதிச்சநல்லூர்

**169)** நூல் நூற்கும் கதிர்களும், துண்டுத் துணிகளும் கிடைத்திருக்கும் இடம் எது?

A) ஆதிச்சநல்லூர் B) அரிக்கமேடு

C) பொருந்தல் D) கொடுமணல்

ETW ACADEMY

170) செங்கடல் கடற்கரையில் உள்ள ____ துறைமுகத்தில் ஏழரை கிலோ மிளகு இருந்த இந்தியப் பானை கண்டெடுக்கப்பட்டது.

A) குசேர் அல் காதம் B) பெர்னிகே C) குவான் லுக் பாட் D) வியன்னா

171) இவற்றுள் தேசியக் கல்விக்கொள்கையோடு தொடர்பில்லாத ஆண்டு எது?

A) 1968 B) 1986 C) 1992 D) 1996

172) எந்த ஆண்டு வரை கல்வித்துறை மாநிலப் பட்டியலில் இருந்தது?

A) 1972 B) 1974 C) 1976 D) 1978

173) கல்வி உரிமைச் சட்டமானது (RTE) ____ முதல் _____ வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழிசெய்கிறது.

A) 6 முதல் 14 B) 6 முதல் 16 C) 6 முதல் 12 D) 5 முதல் 12

174) முதலமைச்சர் எதன் தலைவர்?

A) அமைச்சர்கள் குழு B) அமைச்சரவை C) சட்டசபை D) இவையனைத்தும்

175) மாநில அமைச்சர்கள், தனித்தனியாகவும் கூட்டாகவும் யாருக்குப் பொறுப்பானவர்கள் ஆவர்?

A) ஆளுநருக்கு B) முதலமைச்சருக்கு C) சட்டமன்றத்திற்கு D) சபாநாயகருக்கு

176) தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் படி அமைச்சர்களின் எண்ணிக்கை எது வரை இருக்கலாம்?

A) 24 B) 36 C) 44 D) 21

177) பின்வருவனவற்றுள் ஈரவை சட்டமன்றத்தை கொண்டிருக்கும் மாநிலம் எது?

A) உத்திரபிரதேசம் B) குஜராத் C) சத்திஸ்கர் D) ஒடிசா

178) சட்டமேலவையை உருவாக்கும் அதிகாரம் பெற்றது எது?

A) மக்களவை B) மாநிலங்களவை C) ஆளுநர் D) முதலமைச்சர்

179) உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு அளிக்க வகைசெய்யும் அரசியலமைப்பு உறுப்பு எது?

A) 133 B) 32 C) 226 D) 43

180) அமெரிக்காவில் 1947 ஆம் ஆண்டு, "உச்ச நீதிமன்றம் 1947" என்று தலைப்பிட்ட கட்டுரை ஒன்றில் "Judicial Activism" (நீதித்துறை செயல்பாட்டு முறை) என்ற சொல்லினை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) ஜார்ஜ் வாஷிங்டன் B) ஜான் கென்னடி

C) பிளாக்ஸ் D) ஆர்தர் சன் சிங்கர்

181) உச்ச நீதிமன்றத்தால் அடிக்கடி எடுத்தாளப்படும் அரசமைப்பு உறுப்பு எது?

A) 11 B) 21 C) 31 D) 41

182) மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் பள்ளி சந்தைத் திடல் எனும் பரந்த தென்னந்தோப்புக்கடியில் உள்ளது?

A) மயிலாடும்பாறை B) ஆதிச்சநல்லூர் C) கீழடி D) கொடுமணல்

**183)** பண்டைய இஸ்ரேல் அரசர் சாலமோன் முத்துக்களை ______ என்னுமிடத்திலிருந்து இறக்குமதி செய்தார்?

A) தொண்டி B) முசிறி C) தாண்டலம் D) உவரி

**184)** விக்கிரம பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையேயான வாரிசுரிமைப் போரில், யாருடைய ஆதரவோடு விக்கிரம பாண்டியன் ஆட்சியைப் பிடித்தார்?

A) அதி ராசேந்திரன் B) முதலாம் குலோத்துங்க சோழன்
C) மூன்றாம் குலோத்துங்க சோழன் D) வீர இராசேந்திரன்

**185)** இரண்டாம் புலிகேசிக்கெதிரான மாமல்லனின் போர் வெற்றியை குறிப்பிடுவது எது?

A) மண்டகப்பட்டு செப்பேடு B) கூரம் செப்பேடுகள்
C) மணிமங்கலம் கல்வெட்டு D) காஞ்சி கைலாசநாதர் கோவில் கல்வெட்டு

**186)** பாண்டியர்கள் குறித்த வரலாற்று செய்திகளை நாம் எங்கு அறிய முடியாது?

A) தாலமி குறிப்புகள் B) மெகஸ்தனிஸ், பிளினி குறிப்புகள்
C) யுவான் சுவாங் குறிப்புகள் D) மார்க்கோபோலோ குறிப்புகள்

**187)** சமமான வாய்ப்புகள் மற்றும் சமமான கற்றல் விளைவுகளை அளவிடுதல் ஆகிய பள்ளியின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பரந்தக் குறிக்கோளை அடைய ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டம்?

A) அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA) B) சமக்ர சிக்ஷா திட்டம்
C) அனைவருக்கும் கல்வி இயக்கம் D) மேற்கண்ட அனைத்தும்

**188)** வீரராஜேந்திர சோழனின் _____ கல்வெட்டு மருத்துவப் பள்ளி பற்றி குறிப்பிடுகிறது.

A) திருவாலங்காட்டு கல்வெட்டு B) திருபுவனம் கல்வெட்டு
C) திருவிடைக்காளை கல்வெட்டு D) திருவாவடுதுறை கல்வெட்டு

**189)** சட்டப்பேரவை மற்றும் சட்டமேலவையை "கப் அண்ட் சாசர்" என்று அழைத்தவர் யார்?

A) குஷ்வந்த் சிங் B) அண்ணல் அம்பேத்கர்
C) அறிஞர் அண்ணா D) ஜெயப்பிரகாஷ் நாராயணன்

**190)** தமிழகத்தில் சட்ட மேலவை கலைக்கப்பட்ட நாள் எது?

A) நவம்பர் 14, 1984 B) நவம்பர் 21, 1985 C) நவம்பர் 1, 1986 D) நவம்பர் 30, 1983

**191)** அரசமைப்பு விதி 352இன் படியான தேசிய நெருக்கடி நிலை திரும்பப்பெறப்பட்ட எவ்வளவு காலத்திற்குள் புதிய தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்?

A) 1 வருடம் B) 6 மாதங்கள் C) 3 மாதங்கள் D) 9 மாதங்கள்

**192)** சென்னை உயர் நீதிமன்ற வளாகம் உலகிலேயே எத்தனையாவது பெரிய நீதித்துறை வளாகமாகும்?

A) மூன்றாவது B) நான்காவது C) ஆறாவது D) இரண்டாவது

**193)** 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட எத்தனையாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் உயர் நீதிமன்ற நீதிப்புனராய்வு அதிகாரத்தைக் குறைத்தது மற்றும் தடை செய்தது.

A) 40 B) 41 C) 42 D) 43

ETW ACADEMY

**194)** அரசமைப்பின் 52-வது உறுப்பு, ஒரு குடியரசுத்தலைவர் வேட்பாளர் குறைந்தபட்சம் எத்தனை தேர்வுக்குழு வாக்காளர்களால் முன்மொழிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது?

A) 10 B) 20 C) 40 D) 50

**195)** இந்திய தண்டனைச் சட்டம் அமலுக்கு வந்த ஆண்டு என்ன?

A) 1860 B) 1861 C) 1862 D) 1863

**196)** அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் உயர்நீதிமன்றம் எது?

A) கல்கத்தா உயர்நீதிமன்றம் B) கேரளா உயர்நீதிமன்றம்

C) மும்பை உயர்நீதிமன்றம் D) கவுகாத்தி உயர்நீதிமன்றம்

**197)** ஆளுநரின் மறுப்புரிமை அதிகாரங்களில் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது எது?

A) ஒரு மசோதாவிற்கு ஒப்புதல் அளிப்பதை நிறுத்தி வைக்கலாம்.

B) நிதி முன்வரைவைத் தவிர்த்து எந்த ஒரு முன்வரைவையும் மறு பரிசீலனைக்காக மாநிலச் சட்டமன்றத்துக்கு திருப்பி அனுப்பலாம்.

C) ஆளுநர் தனது மறுப்புரிமை அதிகாரத்தை இரண்டுமுறைக்குமேல் பயன்படுத்த முடியாது ==> ஒருமுறைக்கு மேல்

D) ஆளுநர், தேவை என்று கருதினால் ஒரு முன்வரைவை குடியரசுத்தலைவரின் கருத்துக்காக நிறுத்திவைக்கலாம்

**198)** மறுபரிசீலனை செய்யுமாறு எந்த மசோதாவை குடியரசுத்தலைவர் திருப்பி அனுப்ப முடியாது?

A) சாதாரண மசோதா B) நிதி மசோதா

C) திருத்தச்சட்ட மசோதா D) மேற்கண்ட அனைத்தும்

**199)** ஒரு சாதாரண முன்வரைவு, ஓர் அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்டு அது மக்களவையில் தோல்வி அடைந்தால், அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்?

A) திருத்தி தாக்கல் செய்யவேண்டும் B) அமைச்சர் பதவிவிலக வேண்டும்

C) அரசாங்கம் பதவிவிலக வேண்டும் D) ஏதேனும் ஒன்று

**200)** பின்வரும் எதில், மக்களவையும் மாநிலங்களவையும் சம அதிகாரம் பெற்றிருக்கவில்லை?

A) முன்வரைவுகளை அறிமுகப்படுத்துல் மற்றும் அதை நிறைவேற்றுதல்.

B) ஒரு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை மேற்கொள்ளுதல்

C) திருத்தச்சட்டம் முன்வரைவுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதை நிறைவேற்றுதல்

D) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, தலைமை தேர்தல் ஆணையர் ஆகியோரை பதவி நீக்கம் செய்யும் பரிந்துரையை குடியரசுத்தலைவருக்கு அனுப்புதல்.

***

© ETW Academy